www.agaram.lk



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

**33 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் உரித்தாகும்.
* உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.

**சுட்டெண் :** ..................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I இற்காக | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர் | | |
| 2 ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக/பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**1.** பின்வரும் கூற்றுகளில் எது நிறுவனமொன்றின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை **மிகச் சிறப்பாக** விபரிக்கின்றது ?
(1) நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பப் பதிவேடுகளில் பதிதல்
(2) நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களை நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்குப் பதிதல்
(3) கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதி அறிக்கைகளைத் தயாரித்தல்
(4) முகாமையாளர்களின் பாவனைக்காக நிறுவனம் பற்றிய தகவல்களை வழங்குதல்
(5) நிறுவனத்தின் அக்கறையுடையோர்களின் தீர்மானம் எடுத்தலுக்காக தகவல்களை வழங்குதல் (......)

**2.** பின்வரும் எண்ணக்கருக்களில் எது நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்களை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துகள் என வகைப்படுத்துவதற்கான அடிப்படையை வழங்குகிறது ?
(1) அட்டுறு (2) தொடர்ந்து இயங்குதல் (3) வரலாற்றுக் கிரயம்
(4) கணக்கீட்டுக் காலம் (5) முன்னெச்சரிக்கை (......)

**3.** பின்வரும் எண்ணக்கருக்களில் எது வருட முடிவிலுள்ள சரக்கிருப்பை கிரயத்தினதும் தேறிய தேறத்தக்க பெறுமதியினதும் ஆகக் குறைந்த பெறுமதியில் இனங்காண்பதற்கான அடிப்படையை வழங்குகிறது ?
(1) அட்டுறு
(2) கணக்கீட்டுக் காலம்
(3) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
(4) தேறல்
(5) முன்னெச்சரிக்கை (......)

**4.** இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் 'நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின்படி' பின்வருவனவற்றுள் எது நிதித் தகவல்களின் மேம்படுத்தும் பண்புசார் குணாதிசயங்களில் ஒன்று **அல்ல** ?
(1) ஒப்பீட்டுத் தன்மை (2) உண்மையான பிரதிநிதித்துவம்
(3) மெய்மையாக்கும் தன்மை (4) காலம் தவறாமை
(5) விளங்கிக்கொள்ளும் தன்மை (......)

**5.** நிறுவனமொன்றின் கணக்கீட்டுச் செய்முறை தொடர்பில், பின்வரும் கூற்றுகளில் எது **சரியானதாகும்** ?
(1) சில்லறைக் காசுப் புத்தகம் நிறுவனத்தின் பேரேட்டுக் கணக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.
(2) எல்லா மூல ஆவணங்களும் நிறுவனமொன்றின் கணக்காளரால் தயாரிக்கப்படுகிறது.
(3) கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் எல்லாச் சொத்துகளையும் பதிவதற்கு கொள்வனவு நாளேடு பயன்படுத்தப்படுகிறது.
(4) நிறுவனமொன்றின் பரீட்சைமீதியின் இணக்கமானது கணக்கீட்டுச் செய்முறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்துகிறது.
(5) பொருட்களின் கடன் விற்பனைகள் தொடர்பான சுருக்கமான தகவல்களானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படுகிறது. (......)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


**6.** பின்வரும் தகவல்கள் வரையறுத்த தயாளன் பொதுக்கம்பனியுடன் தொடர்பானவைகளாகும்.

| | **31.03.2016 இலுள்ளபடி (ரூ.)** | **31.03.2015 இலுள்ளபடி (ரூ.)** |
|---|---|---|
| செலுத்த வேண்டிய வாடகை | – | 60 000 |
| செலுத்த வேண்டிய பழுதுபார்த்தல் செலவுகள் | 40 000 | 80 000 |

- கம்பனியானது 01.04.2014 இல் கட்டடமொன்றை ரூ. 30 000 மாதாந்த வாடகைக்கு எடுத்துள்ளது.
- 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்குச் செலுத்திய வாடகை, பழுதுபார்த்தல் செலவுகள் முறையே ரூ. 480 000, ரூ. 380 000 ஆகும்.

கம்பனியின் 31.03.2016 இலுள்ளவாறான முற்பண வாடகை மற்றும் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பழுதுபார்த்தல் செலவுகள்:

| | **முற்பண வாடகை (ரூ.)** | **பழுதுபார்த்தல் செலவுகள் (ரூ.)** |
|---|---|---|
| (1) | 60 000 | 340 000 |
| (2) | 60 000 | 420 000 |
| (3) | 120 000 | 340 000 |
| (4) | 480 000 | 420 000 |
| (5) | 480 000 | 300 000 |

(......)

**7.** நிறுவனமொன்றினால் 31.03.2016 இல் முடிவடைந்த மாதத்திற்கான தேறிய சம்பளமாக ரூ. 900 000 செலுத்தப்பட்டது. ஊழியர் சேமலாப நிதி (ஊ. சே. நி.) இற்கான ஊழியர்களினதும் தொழில் தருனர்களினதும் பங்களிப்புகள் முறையே 10%, 15% ஆகும். 2016 மார்ச் மாதத்திற்கான இப்பங்களிப்புகள் இதுவரை செலுத்தப்படவில்லை. ஊழியர் சம்பளத்திலிருந்து ஊ. சே. நிதிக்கான பங்களிப்பு மாத்திரமே கழிக்கப்படுகிறது. இக் கொடுக்கல்வாங்கல்களின் **விளைவானது** கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் எதனால் காட்டப்படுகிறது ?

| | **சொத்துகள்** | **பொறுப்புகள்** | **உரிமையாண்மை** |
|---|---|---|---|
| (1) | ரூ. 900 000 குறைவு | ரூ. 150 000 அதிகரிப்பு | ரூ. 1 050 000 குறைவு |
| (2) | ரூ. 900 000 குறைவு | ரூ. 100 000 அதிகரிப்பு | ரூ. 1 000 000 குறைவு |
| (3) | ரூ. 900 000 குறைவு | ரூ. 250 000 அதிகரிப்பு | ரூ. 1 150 000 குறைவு |
| (4) | ரூ. 1 000 000 குறைவு | ரூ. 150 000 அதிகரிப்பு | ரூ. 1 150 000 குறைவு |
| (5) | ரூ. 1 000 000 குறைவு | – | ரூ. 1 000 000 குறைவு |

(......)

**8.** வரையறுத்த ரேனுகா பொதுக்கம்பனியின் 31.03.2016 இலுள்ளவாறான பரீட்சைமீதியானது சமப்படவில்லை. இவ் வேறுபாடானது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையானது பின்வருவனவற்றை வெளிக்கொணர்ந்தது.

A - மின்சார செலவினங்களுக்காக செலுத்தப்பட்ட ரூ. 200 000 ஆனது காசுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டுள்ளது.

B - கொள்வனவு நாளேடானது ரூ. 60 000 இனால் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.

C - கடன்பட்டோரிடமிருந்து பெற்ற ரூ. 50 000 ஆனது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் காசுக் கொடுப்பனவாக பதியப்பட்டிருந்தது.

D - ரூ. 40 000 விற்பனை விலைப்பட்டியலானது கடன்பட்டோர் பேரேட்டில் மாத்திரமே பதியப்பட்டுள்ளது.

மேலே தரப்பட்டுள்ள வழுக்கல்களில் எவை தொங்கல் கணக்கிலுள்ள மீதியிற்குப் பங்களித்துள்ளன ?

(1) A, C ஆகியன மாத்திரம் (2) B, D ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம் (4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம்

(......)

**9.** திருமண மண்டபமொன்றை வாடகைக்கு விடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றில் 2016 ஏப்ரல் மாதத்தில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. இம் மண்டபம் ரூ. 400 000 வாடகைக்கு விடப்படுகிறது. இவ் வாடகையில் 25% ஆனது மண்டபத்தை முன்பதிவு செய்யும்போது செலுத்த வேண்டியுள்ளதுடன் மீதிப் பணமானது திருமண வரவேற்பு முடிவடைந்து ஒரு வார காலத்தினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

| **திகதி** | **கொடுக்கல்வாங்கல்** | **தொகை (ரூ.)** |
|---|---|---|
| 02.04.2016 | 28.03.2016 இல் நடைபெற்ற திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட மீதித் தொகை | 300 000 |
| 05.04.2016 | 27.04.2016 இல் நடைபெறவிருக்கும் திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட முற்பணம் | 100 000 |
| 15.04.2016 | 10.05.2016 இல் நடைபெறவிருக்கும் திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட முற்பணம் | 100 000 |
| 30.04.2016 | 2016 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் | 330 000 |

2016 ஏப்ரல் மாதத்திற்கான வருமானம், இலாபம்/(நட்டம்) மற்றும் 30.04.2016 இலுள்ளவாறான வருமதிகள் எவை ?

| | **வருமானம் (ரூ.)** | **இலாபம்/(நட்டம்) (ரூ.)** | **வருமதிகள் (ரூ.)** |
|---|---|---|---|
| (1) | 200 000 | (130 000) | 600 000 |
| (2) | 400 000 | 70 000 | 300 000 |
| (3) | 500 000 | 170 000 | 600 000 |
| (4) | 700 000 | 370 000 | 300 000 |
| (5) | 800 000 | 470 000 | 600 000 |

(......)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



● **10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் பாடசாலையொன்றின் பழைய மாணவர் சங்கத்தின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவையாகும்.

| **விபரம்** | **தொகை (ரூ.'000)** |
|---|---|
| பெற்ற சந்தா (இதில் 1/4 பங்கானது 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானது) | 360 |
| விளையாட்டு உபகரண கொள்வனவுக்காகப் பெறப்பட்ட நன்கொடைகள் | 500 |
| நிலையான வைப்பினால் உழைத்த வட்டி வருமானம் | 50 |
| மொத்தச் செலவுகள் | 300 |

**மேலதிக தகவல்கள்:**

- அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூ. 4 000 ஆகும். 31.03.2016 இலுள்ளவாறு இக் கழகத்தில் 100 அங்கத்தவர்கள் இருந்துள்ளனர்.
- நன்கொடைகளைப் பெற்றுக்கொண்ட வருடத்திலிருந்து தொடர்ந்துவரும் 5 வருட காலத்திற்கு அவற்றை வருமானமாக இனங்காண்பது இக் கழகத்தின் கொள்கையாகும்.
- நிலையான வைப்பு வட்டியானது 31.05.2016 இல் முதிர்ச்சியடையும்போது பெறப்படும்.
- எல்லாச் செலவுகளும் காசு மூலம் செலுத்தப்பட்டுள்ளது.
- 31.03.2015 இல் காசு மீதியானது ரூ. 150 000 ஆக இருந்தது.

**10.** 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான மிகை எது ?
(1) ரூ. 120 000 (2) ரூ. 210 000 (3) ரூ. 250 000 (4) ரூ. 520 000 (5) ரூ. 650 000 (......)

**11.** 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசு மீதியின் **தேறிய அதிகரிப்பு** எது ?
(1) ரூ. 470 000 (2) ரூ. 520 000 (3) ரூ. 560 000 (4) ரூ. 610 000 (5) ரூ. 860 000 (......)

**12.** பெறுமதி சேர் வரி (VAT) பதிவினைக் கொண்டுள்ள வரையறுத்த அஜித் பொதுக்கம்பனியானது 01.04.2015 இல் இயந்திரமொன்றை ரூ. 4 140 000 இற்கு வாங்கியது. இத்தொகையில் VAT இற்காகச் செலுத்திய ரூ. 540 000 உம் உள்ளடங்கியுள்ளது. இந்த இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். இதற்கு எஞ்சிய பெறுமதி எதுவும் இல்லை.
LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி 31.03.2016 இலுள்ளவாறான இயந்திரத்தின் கொண்டுசெல் தொகை யாது ?
(1) ரூ. 2 448 000 (2) ரூ. 2 880 000 (3) ரூ. 3 312 000 (4) ரூ. 3 600 000 (5) ரூ. 4 140 000 (......)

**13.** பங்குடைமையொன்று தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது **சரியானது** ?
(1) பங்குடைமையொன்றின் உரிமையாண்மையானது பங்காளர்களின் மூலதனத்தையும் நடைமுறைக் கணக்கு மீதிகளையும் ஏனைய ஒதுக்கங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கிய மொத்தத் தொகையினைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
(2) 1890 ஆம் ஆண்டு பங்குடைமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி பங்காளரொருவர் அப்பங்குடைமைக்குத் தனது சேவையை வழங்கும்போது மாத்திரமே அவர் சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவராவர்.
(3) 1890 பங்குடைமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி பங்குடைமையின் இலாப நட்டங்களானது பங்காளர்களின் மூலதனப் பங்களிப்புகளுக்கு ஏற்ப அவர்களுக்கிடையே பகிரப்படுகிறது.
(4) பங்குடைமையொன்றின் நன்மதிப்பானது பங்காளர் ஒருவரை அனுமதிக்கும்போது அல்லது அவர் இளைப்பாறும்போது மாத்திரமே மதிப்பீடு செய்யப்படும்.
(5) நிதி வருடமொன்றின் முதல் நாளில் அல்லது இறுதி நாளில் மாத்திரமே பங்காளரொருவரைச் சேர்க்கவோ அல்லது பங்காளரொருவர் இளைப்பாறவோ முடியும். (......)

**14.** பின்வருவனவற்றுள் எதை/எவற்றை LKAS 2 (சரக்கிருப்பு) இன் வரைவிலக்கணத்தின்படி சரக்கிருப்பு என அடையாளப்படுத்த முடியும் ?
A - வழமையான வியாபார நடவடிக்கைகளின்போது விற்பனைக்காக வைத்திருக்கும் பொருட்கள்
B - வழமையான வியாபார நடவடிக்கைகளின்போது விற்பனை செய்வதற்கான உற்பத்திச் செய்முறையிலுள்ள உருப்படிகள்
C - உற்பத்திச் செயன்முறையில் அல்லது சேவை வழங்குவதில் நுகரப்படும் பொருட்கள் மற்றும் வழங்கல்கள் (supplies)
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம் (3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம் (......)

**15.** கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் வரையறுத்த ராதிகா பொதுக்கம்பனியின் மோட்டார் வாகனங்கள் தொடர்பானவையாகும்.

| **விபரம்** | **ரூ.'000** |
|---|---|
| 01.04.2015 இலுள்ளவாறான கொண்டுசெல் தொகை | 6 500 |
| 30.09.2015 இல் அகற்றப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் மீதான நட்டம் | 150 |
| 01.01.2016 இல் பெறப்பட்ட புதிய மோட்டார் வாகனம் | 4 000 |

வருட ஆரம்பத்தில் காணப்படும் எல்லா மோட்டார் வாகனங்களும் 01.04.2010 இல் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். இவ்வருடத்தில் அகற்றப்பட்ட மோட்டார் வாகனமானது ரூ. 3 000 000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகும். இம்மோட்டார் வாகனங்களானது நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.
31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான மோட்டார் வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வும் மற்றும் அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் விற்பனையிலிருந்து பெற்ற தொகையும் பின்வருவனவற்றுள் எவை ?

| | **பெறுமானத்தேய்வு (ரூ.'000)** | **விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகை (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 650 | 1 500 |
| (2) | 1 000 | 1 350 |
| (3) | 1 100 | 1 350 |
| (4) | 1 100 | 1 200 |
| (5) | 1 250 | 1 200 |

(......)

[பக். 4 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

16. வரையறுத்த மஞ்சுளா பொதுக்கம்பனியின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான சுருக்கிய வருமானக் கூற்று பின்வருமாறு:

| விபரம் | ரூ.'000 |
|---|---|
| மொத்த இலாபம் | 280 |
| செலவுகள் (பெறுமானத்தேய்வு ரூ. 20 000 மற்றும் அலுவலக உபகரண விற்பனை மீதான நட்டம் ரூ. 10 000 உள்ளடங்கலாக) | 100 |
| வருமானவரிச் செலவு | 80 |
| வருடத்திற்கான இலாபம் | 100 |

31.03.2016 இல் முடிவடைந்த வருடத்தில் கீழே தரப்பட்டுள்ள உருப்படிகளின் மீதிகள் பின்வருமாறு **அதிகரித்துள்ளன.**

| விபரம் | ரூ.'000 |
|---|---|
| சரக்கிருப்பு | 80 |
| வியாபார வருமதிகள் | 120 |
| வியாபார செல்மதிகள் | 130 |

இவ்வருடத்தில் செலுத்தப்பட்ட வருமானவரி ரூ. 50 000 ஆகும்.

LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் யாது ?

(1) ரூ. 10 000 (2) ரூ. 90 000 (3) ரூ. 150 000 (4) ரூ. 180 000 (5) ரூ. 230 000 (……)

17. வரையறுத்த இந்திரா பொதுக்கம்பனியின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகள் 15.06.2016 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டன. 31.03.2016 இலிருந்து 15.06.2016 வரையான காலப்பகுதிக்குள் கம்பனியில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

A - 15.04.2016 இலிருந்து வியாபாரத்தின் ஒரு பகுதியை நிறுத்தும் திட்டத்திற்கான அறிவிப்பினை விடுத்தல். இதனால் வருடாந்தம் ரூ. 600 000 ஐ சேமிப்பதற்கு எதிர்பாக்கப்படுகிறது.

B - 20.04.2016 இல் பிரதான உற்பத்தி பொறி தீயினால் அழிக்கப்பட்டுள்ளது. அதனால் ரூ. 1 000 000 நட்டம் ஏற்பட்டது.

C - 30.04.2016 இல் மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனையினால் எழுந்த ரூ. 750 000 மீதியைக் கொண்ட கடன்பட்டோரொருவர் 30.05.2016 இல் முறிவடைந்துள்ளார்.

D - 15.06.2016 இல் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூ. 300 000 இறுதி பங்கிலாபமாகப் பிரகடனப்படுத்தப்படல்.

LKAS 10 (அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்) இன்படி மேலே கூறப்பட்டுள்ள நிகழ்வுகளில் எவை 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்தில் **சீராக்கம் செய்யத் தேவையற்ற நிகழ்வுகள்** எனக் கருதப்படும் ?

(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம் (3) A, C, D ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (……)

● **18, 19, 20 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுத்த நடேந்தினி பொதுக்கம்பனியுடன் தொடர்பானவையாகும்.

| விபரம் | (ரூ.'000) |
|---|---|
| விற்பனைகள் | 1 200 |
| விற்பனைக் கிரயம் | 600 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 300 |
| மோட்டார் வாகனமொன்றின் விற்பனை மீதான ஆதாயம் | 80 |
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 100 |
| மீள் மதிப்பீட்டு பற்றாக்குறை - அலுவலக உபகரணங்கள் | 120 |
| மீள் மதிப்பீட்டு மிகை - கட்டடங்கள் | 180 |

31.03.2015 இல் முடிவடைந்த வருடத்தில் அலுவலக உபகரணத்தை மீள் மதிப்பீடு செய்ததில் ரூ. 90 000 மிகையொன்று இனங்காணப்பட்டுள்ளது. 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்தில் கட்டடங்களானது முதல் தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

18. இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான இனங்காணப்பட்ட மொத்த வருமானம், மொத்தச் செலவுகள் எவை ?

| | மொத்த வருமானம் (ரூ.'000) | மொத்தச் செலவுகள் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 1 280 | 900 |
| (2) | 1 340 | 900 |
| (3) | 1 380 | 1 020 |
| (4) | 1 460 | 1 020 |
| (5) | 1 460 | 1 120 |

(……)

19. LKAS 1 (நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் எவை ?

| | இலாபம் (ரூ.'000) | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 160 | 180 |
| (2) | 250 | 90 |
| (3) | 260 | 180 |
| (4) | 350 | 90 |
| (5) | 380 | 60 |

(……)

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



**20.** LKAS 1 (நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பித்தல்) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் மற்றும் நிறுத்திவைத்த வருவாய்கள் எவை ?

| | மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000) | நிறுத்திவைத்த வருவாய் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 340 | 160 |
| (2) | 340 | 250 |
| (3) | 440 | 250 |
| (4) | 440 | 260 |
| (5) | 440 | 280 |

(......)

**21.** வியாபாரக் கம்பனியொன்றின் மொத்த இலாப விகிதம் மாறாதிருக்கையில் பின்வருவனவற்றுள் எது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது நடைமுறையாண்டின் தேறிய இலாப விகிதத்தைக் **குறைவடையச்** செய்கிறது ?

A - நடைமுறை வருடத்தின் முடிவிலுள்ள சரக்கிருப்பின் தேறிய தேறத்தக்க பெறுமதியானது அதன் கிரயத்தை விடக் குறைவாய் இருத்தல்

B - வட்டி வருமானத்தில் குறைவு

C - கட்டடங்கள் முதல் தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டபோது ஏற்பட்ட பற்றாக்குறை

D - சாதாரண பங்குதாரர்களுக்கான இடைக்காலப் பங்கிலாபக் கொடுப்பனவு

(1) A, B ஆகியன மாத்திரம்
(2) B, C ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம்
(4) A, B, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம்
(......)

**22.** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| விற்பனைகள் | ரூ. | 4 000 000 |
| வருடத்திற்கான இலாபம் | ரூ. | 200 000 |
| வட்டிச் செலவுகள் | ரூ. | 60 000 |
| வருமானவரிச் செலவுகள் | ரூ. | 40 000 |

31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாப விகிதம் மற்றும் வட்டிக்காப்பு விகிதம் என்பன யாவை ?

| | தேறிய இலாப விகிதம் (%) | வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்) |
|---|---|---|
| (1) | 5 | 3.3 |
| (2) | 5 | 5 |
| (3) | 6 | 4 |
| (4) | 6 | 5 |
| (5) | 7.5 | 4 |

(......)

**23.** கிரயங்களை வகைப்படுத்துதல் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது **சரியானது** ?

(1) பொருள் கிரயமானது நேர்க் கிரயங்களை மாத்திரமே உள்ளடக்கியுள்ளது.
(2) எல்லா நேர்க் கிரயங்களும் மாறும் கிரயங்களாகும்.
(3) இயந்திரத்தின் பெறுமானத்தேய்வானது கட்டுப்படுத்தக்கூடிய கிரயமொன்றாகக் கருதப்படும்.
(4) கிரயங்களானது அவற்றின் நடத்தையின் அடிப்படையில் பிரதானமாக மாறும் கிரயம், நிலையான கிரயம் என வகைப்படுத்தப்படும்.
(5) கிரயங்களானது சரக்கிருப்பு மதிப்பீட்டுக்காக 'தொடர்புடைய' மற்றும் 'தொடர்பற்ற' கிரயங்கள் என வகைப்படுத்தப்படுகிறது.
(......)

● **24ஆம் 25ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

கம்பனியொன்று பொருட்களை உற்பத்தி செய்வதற்கு 'A' எனும் மூலப்பொருளைப் பயன்படுத்துகிறது. இப்பொருளின் கட்டளையொன்றுக்கான கிரயம் ரூ. 250 ஆகும். அதன் அலகொன்றுக்கான வருடாந்த இருப்பு வைத்திருத்தல் கிரயம் ரூ. 100 ஆகும். இக் கம்பனி 'A' மூலப்பொருட்களின் மீள் கட்டளைத் தொகையைத் தீர்மானிப்பதற்கு சிக்கன கட்டளைத் தொகை (EOQ) மாதிரியைப் பயன்படுத்துகிறது. பின்வரும் தகவல்கள் 'A' மூலப்பொருட்களுடன் தொடர்பானவை.

| | |
|---|---|
| ஆகக் கூடிய பாவனை வாரமொன்றுக்கு | 750 அலகுகள் |
| ஆகக் குறைந்த பாவனை வாரமொன்றுக்கு | 250 அலகுகள் |
| சிக்கன கட்டளைத் தொகை | 1 000 அலகுகள் |
| விநியோகக் காலம் | 3 வாரங்கள் (ஆகக் குறைந்தது) - 5 வாரங்கள் (ஆகக் கூடியது) |

**24.** மூலப்பொருள் 'A' இன் ஆகக் கூடிய இருப்பு மட்டம் எது ?

(1) 1 750 அலகுகள்
(2) 2 750 அலகுகள்
(3) 3 500 அலகுகள்
(4) 3 750 அலகுகள்
(5) 4 000 அலகுகள்
(......)

**25.** மூலப்பொருள் 'A' இன் வருடாந்தக் கேள்வி எது ?

(1) 200 000 அலகுகள்
(2) 400 000 அலகுகள்
(3) 500 000 அலகுகள்
(4) 1 250 000 அலகுகள்
(5) 2 500 000 அலகுகள்
(......)

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



- **26ஆம் 27ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் இயந்திரம், முடிவுறுத்தல் ஆகிய இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும் சேவைத் திணைக்களத்தையும் (களஞ்சியம்) கொண்டுள்ள கம்பனியொன்றுடன் தொடர்பானவையாகும்.

| விபரம் | இயந்திரம் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|
| பாதிடப்பட்ட மேந்தலைகள் | ரூ. 175 000 | ரூ. 125 000 | ரூ. 50 000 |
| மேந்தலை உறுஞ்சல் வீதம் | இயந்திர மணித்தியாலமொன்றுக்கு ரூ. 20 | ஊழிய மணித்தியாலமொன்றுக்கு ரூ. 10 | – |

களஞ்சியத்தின் மொத்த மேந்தலையானது உற்பத்தித் திணைக்களங்கள் இரண்டுக்குமிடையில் சமமாக மீள் பகிரப்படுகின்றது. இக் கம்பனியில் 'X' பொருளின் அலகொன்றை உற்பத்திச் செய்வதற்கு 2 இயந்திர மணித்தியாலங்களும் 5 ஊழிய மணித்தியாலங்களும் தேவைப்படுகின்றன.

**26.** இயந்திரம், முடிவுறுத்தல் திணைக்களங்களில் முறையே பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் இயந்திர மணித்தியாலங்கள், ஊழிய மணித்தியாலங்கள் எவை ?

| | இயந்திர மணித்தியாலங்கள் | ஊழிய மணித்தியாலங்கள் |
|---|---|---|
| (1) | 8 750 | 12 500 |
| (2) | 10 000 | 15 000 |
| (3) | 10 000 | 10 000 |
| (4) | 17 500 | 6 250 |
| (5) | 20 000 | 7 500 |

(......)

**27.** உற்பத்தி பொருள் 'X' இன் மதிப்பிடப்பட்ட மூலக்கிரயம் ரூ. 120 எனின், இப்பொருளின் அலகிற்கான உற்பத்திக் கிரயம் எது ?

(1) ரூ. 140 (2) ரூ. 150 (3) ரூ. 160 (4) ரூ. 170 (5) ரூ. 210 (......)

**28.** கிரயம்–அளவு–இலாபம் பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எவை **சரியானவை** ?

A - சமப்பாட்டுப் புள்ளிக்கு மேல் ஈட்டப்படும் பங்களிப்பானது இலாபத்தினைக் கொடுக்கும்.
B - சமப்பாட்டுப் புள்ளியில் மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்திற்குச் சமமானதாகும்.
C - சமப்பாட்டுப் புள்ளிக்கு மேல் மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்தினதும் இலாபத்தினதும் கூட்டுத்தொகைக்குச் சமமானதாகும்.
D - சமப்பாட்டுப் புள்ளிக்குக் கீழ் நிலையான கிரயமானது மொத்தப் பங்களிப்பினை விட அதிகமானதாகும்.

(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம் (3) A, C, D ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (......)

**29.** கம்பனியொன்று தனிப் பொருளொன்றை உற்பத்திச் செய்கிறது. இப்பொருளின் உற்பத்திக் கிரயம் அலகொன்றிற்கு ரூ. 200 ஆகும். இதில் 75% மாறும் கிரயமாகும். இக் கம்பனி தற்போது 14 000 அலகுகளை உற்பத்தி செய்கின்றது. இதன் பங்களிப்பு–விற்பனை வீதம் 50% ஆகும். தற்போதைய செயற்பாட்டு மட்டமானது 16 000 அலகுகளாக அதிகரிக்குமாயின் கம்பனியானது மேலதிக உற்பத்தி நிலையான மேந்தலைக் கிரயமாக ரூ. 260 000 ஐ ஏற்க வேண்டியிருக்கும்.

தற்போதுள்ள செயற்பாட்டு மட்டத்தில் சமப்பாட்டுப் புள்ளி (ரூபாவில்) மற்றும் செயற்பாட்டு மட்டம் 16 000 அலகுகளில் அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம்:

| | சமப்பாட்டுப் புள்ளி (ரூ. '000) | அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம் (ரூ.) |
|---|---|---|
| (1) | 1 400 | 200.00 |
| (2) | 1 400 | 210.00 |
| (3) | 14 00 | 216.25 |
| (4) | 4 200 | 140.00 |
| (5) | 4 200 | 210.00 |

(......)

**30.** ஏனைய காரணிகள் மாறாதிருக்கும்போது பின்வருவனவற்றுள் எவை செயற்றிட்டமொன்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதியில் **அதிகரிப்பினை** ஏற்படுத்தும் ?

A - எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களில் அதிகரிப்பு
B - ஆரம்ப முதலீட்டு கிரயத்தில் குறைவு
C - சொத்தின் எஞ்சிய பெறுமதியில் அதிகரிப்பு
D - தேவைப்படும் திரும்பல் வீதத்தில் அதிகரிப்பு

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம் (3) B, D ஆகியன மாத்திரம்
(4) A, B, C மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (......)

- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடையினைப் புள்ளிக் கோடுகளில் எழுதுக.**

**31.** பின்வரும் செயற்பாடுகள் முகாமைக் கணக்கீட்டு எல்லைக்குள் உள்ளடங்குமா என்பதை குறிப்பிடுக.

| செயற்பாடு | ஆம்/இல்லை |
|---|---|
| A - பொருட்களின் விலையிடலுக்கான கிரயத் தகவல்களை வழங்குதல் | :............................ |
| B - பொது நோக்கத்திற்கான நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் | :............................ |
| C - நீண்டகால மூலதன முதலீட்டு செயற்திட்டங்களுக்கான மதிப்பீடு | :............................ |
| D - கணக்கீட்டு விகிதங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் இலாபத்தன்மை பகுப்பாய்வு | :............................ |

[பக். 7 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**32.** விஷ்ணு 01.01.2016 இல் மூலதனமாக ரூ. 1 000 000 ஐ முதலீடு செய்து வியாபாரமொன்றை ஆரம்பித்தார். இவர் இத்தொகையில் 90% ஐப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவழித்துள்ளதுடன் இப் பொருட்களைக் கிரயத்தில் 30% ஐக் கூட்டி விற்பனை செய்துள்ளார். இவ் வியாபாரத்தின் தேறிய சொத்துகள் 31.03.2016 இல் ரூ. 1 200 000 ஆகும். இக்காலப்பகுதியில் எதுவித மேலதிக மூலதனமோ அல்லது பற்றுகளோ மேற்கொள்ளப்படவில்லை. 31.03.2016 இல் முடிவடைந்த காலத்திற்கான பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) இலாபம் ரூ. .................... (ஆ) செயற்பாட்டுச் செலவினங்கள் ரூ. ..........................

**33.** சர்மிளா கடனுக்குப் பொருட்களை 01.04.2016 இல் ரூ. 100 000 இற்கு கொள்வனவு செய்தார். அதே தினத்தில் இப் பொருட்கள் ரூ. 5 000 விற்பனைச் செலவுடன் காசுக்கு ரூ. 120 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் இக் கொடுக்கல் வாங்கல்களின் **தேறிய தாக்கத்தினைக்** காட்டுக.

**சொத்துகள் (ரூ.)** .............. = **பொறுப்புகள் (ரூ.)** .............. + **உரிமையாண்மை (ரூ.)** ..............

**34.** உற்பத்தி நிறுவனமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியை கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களானவை **அதிகரிக்குமா** அல்லது **குறைக்குமா** அல்லது **மாற்றமின்மையா** என்பதைக் குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல்** | **அதிகரிக்கும்/ குறைக்கும்/ மாற்றமின்மை** |
|---|---|
| A - பாவித்த இயந்திரத்தை கடனுக்கு விற்பனை செய்தல் | :............................ |
| B - கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் திரும்ப வருதல் | :............................ |
| C - வருட காலத்தினுள் அறவிடமுடியாக் கடன்களைப் பதிவழித்தல் | :............................ |
| D - வருட முடிவில் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டைச் செய்தல் | :............................ |

**35.** கம்பனியொன்று 01.01.2016 இல் பட்டியல் விலையில் ரூ. 500 000 இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. வழங்குனர் கொள்வனவு விலையில் வியாபாரக் கழிவாக 10% ஐயும் செலுத்த வேண்டிய தொகை 30 நாட்களுக்குள் செலுத்தப்படுமாயின் காசுக் கழிவாக 5% ஐயும் வழங்க சம்மதித்துள்ளார். கம்பனியானது செலுத்த வேண்டிய பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தியுள்ளது.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) பெற்றுக்கொண்ட இயந்திரத்தின் கிரயம் ரூ. :............................

(ஆ) 31.01.2016 இல் முடிவடைந்த மாதத்திற்கான பெற்ற கழிவினை பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவு:

.....................................................................................................................

.....................................................................................................................

**36.** கம்பனியொன்றின் வங்கி மீதியாக 31.03.2016 இல் ரூ. 450 000 இருந்தது. இத்தினத்தில் இம் மீதியானது வங்கிக்கூற்று மீதியுடன் ஒத்திருக்கவில்லை. இம் மீதிகளை இணைக்கும்போது பின்வருவன வெளிக்கொணரப்பட்டன.

- கடன்பட்டோர் ஒருவர் ரூ. 80 000 காசோலையை நேரடியாக வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.
- வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள் ரூ. 40 000 ஆகும்.
- வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 60 000 காசோலை மறுக்கப்பட்டுள்ளது.
- வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 20 000 காசோலை இன்னும் வசூலிக்கப்படவில்லை.
- வழங்கப்பட்ட ரூ. 30 000 காசோலைகள் இன்னும் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

பின்வருவனவற்றை 31.03.2016 இலுள்ளபடி கணிப்பிடுக:

(அ) சீராக்கிய வங்கி மீதி ரூ. ............................

(ஆ) வங்கிக் கூற்று மீதி ரூ. ............................

**37.** கம்பனியொன்று தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் எந்த கணக்கீட்டுக் எண்ணக்கருவை **மிகச் சிறப்பாக** விபரிக்கிறது என்பதைக் குறிப்பிடுக.

| **சந்தர்ப்பம்** | **கணக்கீட்டு எண்ணக்கரு** |
|---|---|
| A - காணியின் நியாய பெறுமதி கூடுதலாக இருந்தபோதும் அதனைப் பெற்றுக்கொண்ட விலையில் அறிக்கையிடல் | :................................ |
| B - இயந்திரத்தைப் பயன்படுத்த எதிர்பார்க்கும் காலத்திற்கு அதன் பெறுமானத்தேய்வை இனங்காணல் | :................................ |
| C - ரூ. 5 000 இற்குக் குறைவான கொள்வனவு விலையுடைய எல்லாச் சொத்துகளும் செலவாக இனங்காணப்படல் | :................................ |
| D - சரக்கிருப்பை மதிப்பீடு செய்வதற்காக 'முதல் உள் - முதல் வெளி' விலையிடல் முறையினைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துதல் | :................................ |

[பக். 8 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**38.** பின்வரும் ஒவ்வொரு உருப்படியும் நிதிக் கூற்றுகளிலுள்ள எந்த மூலத்தில் இனங்காணப்படுகிறது என்பதைக் குறிப்பிடுக.

| உருப்படிகள் | மூலம் |
|---|---|
| A - நிறுத்திவைத்த வருவாய்கள் | :............................ |
| B - வருமதி வட்டி | :............................ |
| C - அலுவலக உபகரணமொன்றின் விற்பனை மீதான நட்டம் | :............................ |
| D - உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | :............................ |

● **39ஆம் 40ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

சக்தி, கலா, பாத்திமா ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து பங்குடைமையொன்றை நடாத்தி வந்தனர். 31.03.2016 இல் பங்குடைமையிலிருந்து பாத்திமா இளைப்பாறினார். இத்தினத்தில் பங்குடைமையின் நன்மதிப்பு ரூ. 1 000 000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கை பேணுவதில்லை என்பது பங்குடைமையின் கொள்கையாகும். சக்தியும் கலாவும் இலாப நட்டத்தை சமமாகப் பகிர்வு செய்து பங்குடைமையை தொடர்ந்து நடாத்தினர். 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் நடைமுறைக் கணக்கில் பதியப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு:

| விபரம் | சக்தி (ரூ.'000) | கலா (ரூ.'000) | பாத்திமா (ரூ.'000) |
|---|---|---|---|
| இலாபப் பங்கு | 500 | 300 | 200 |
| சம்பளங்கள் | 400 | 400 | 400 |
| மூலதன வட்டி | 300 | 200 | 100 |
| பற்றுகள் | (40) | – | (20) |
| செலுத்திய சம்பளம் | (400) | (400) | (400) |

**39.** பங்காளர்களின் மூலதனக் கணக்குகளில் நன்மதிப்பை சீராக்குவதற்கான நாட்குறிப்புப் பதிவு:

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

**40.** பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடைமையின் இலாபம் ரூ. ..............................

(ஆ) பகிரப்பட்ட மொத்த இலாபம் :

சக்தி ரூ. .............................................. பாத்திமா ரூ. ..............................................

**41.** LKAS 8 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்) இன்படி கணக்கீட்டுக் கொள்கைகளை கம்பனி மாற்றக்கூடிய **இரு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**42.** மின்சாரப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்று அதன் வாடிக்கையாளர்களால் பொருட்களில் குறைபாடுகள் உள்ளது எனத் திருப்பிக் கொடுக்கப்படுமாயின் அதற்கான விலையை திருப்பிக் கொடுப்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. எனினும் இது தொடர்பாக சட்டக் கடப்பாடுகள் எதுவுமில்லை. இந்நிலைமையில் LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள்) இன்படி, ஏற்பாடொன்றை இனங்காண்பதற்கு திருப்திபடுத்த வேண்டிய **மூன்று** பிரமாணங்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

**43.** LKAS 17 (குத்தகை) இன்படி குத்தகையொன்றை ஒரு நிதிக் குத்தகையாக வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பிரமாணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

[பக். 9 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

கம்பனியொன்று ரூ. 5 500 000 இற்கு புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. பொருத்தமான நிரல்களின் '√' எனக் குறிப்பிடுவதன் மூலம் LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணம்) இன்படி இவ் இயந்திரக் கொள்வனவு தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள கொடுப்பனவுகளானது இயந்திரத்தின் தொடக்கக் கிரயத்திலா அல்லது செலவுகளிலா இனங்காணப்படும் என்பதைக் குறிப்பிடுக.

| விடயம் | தொகை (ரூ.'000) | தொடக்கக் கிரயம் | செலவுகள் |
|---|---|---|---|
| A - இயந்திரத்தை இயக்குபவருக்கான பயிற்சி | 120 | ...................... | .................... |
| B - பொருத்துதலை உறுதிப்படுத்துவதற்கான பொறியிலாளர் கட்டணம் | 12 | ...................... | .................... |
| C - இயந்திரத்தைப் பரிசோதித்தல் | 220 | ...................... | .................... |
| D - இயந்திர திறப்புவிழாச் செலவு | 150 | ...................... | .................... |

**45.** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவையாகும்.

- இவ்வருடத்தில் ரூ. 250 000 கிரயம் கொண்ட அலுவலக உபகரணமொன்று ரூ. 50 000 ஆதாயத்தில் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்த தினத்தில் இச்சொத்தின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. 120 000 ஆகும்.
- 01.04.2015 இல் ரூ. 1 500 000 கிரயமான காணியொன்றை ரூ. 500 000 ஐக் காசாகச் செலுத்தியும் மீதித் தொகைக்கு இக்காணியை வங்கியில் அடகு வைத்துப் பெற்றுக்கொண்ட வங்கிக் கடனின் மூலம் செலுத்தியும் வாங்கப்பட்டது. இக் கடனுக்காக 31.03.2016 இல் ரூ. 100 000 வட்டி செலுத்தப்பட்டது.

LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி மேலே கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக ஏற்பட்ட காசுப் பாய்ச்சல்களையும் (பெறுமதிகளுடன்) இக் காசுப் பாய்ச்சல்களின் பொருத்தமான வகைப்படுத்தல்களையும் குறிப்பிடுக.

| காசுப் பாய்ச்சல் | தொகை (ரூ.) | வகைப்படுத்தல் |
|---|---|---|
| A - .................................... | .................................... | .................................... |
| B - .................................... | .................................... | .................................... |
| C - .................................... | .................................... | .................................... |
| D - .................................... | .................................... | .................................... |

**46.** ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விகிதங்களிலும் ஏற்படும் **அதிகரிப்பானது** கம்பனியொன்றின் திரவத்தன்மையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துமா என்பதைக் குறிப்பிடுக.

| விகிதம் | திரவத்தன்மையில் முன்னேற்றம் (ஆம்/இல்லை) |
|---|---|
| A - கடன்பட்டோர் புரள்வு | :........................................ |
| B - கடன் சேகரிப்புக் காலம் | :........................................ |
| C - சரக்கிருப்புப் புரள்வு | :........................................ |
| D - சரக்கிருப்பு வைத்திருத்தல் காலம் | :........................................ |

**47.** கீழே தரப்பட்டுள்ள கிரயங்கள் மேற்சட்டை உற்பத்தி செய்யும் கம்பனியொன்றில் ஏற்பட்டதாகும். இக்கிரயங்களை மாறும் கிரயம் (மாறும்) அல்லது நிலையான கிரயம் (நிலையான) என வகைப்படுத்தி, அவை பொருட் கிரயத்தில் உள்ளடக்கப்படுமா என்பதைக் குறிப்பிடுக.

| கிரயம் | மாறும்/நிலையான | பொருட் கிரயம் (ஆம்/இல்லை) |
|---|---|---|
| A - உற்பத்தி செய்யப்பட்ட மேற்சட்டைகளின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் ஊழியர்களுக்கான கூலிகள் | ................ | ........................... |
| B - மேற்சட்டைகளில் தைக்கப்பட்ட பொத்தான்களின் கிரயங்கள் | ................ | ........................... |
| C - தொழிற்சாலைக்கான காப்புறுதிக் கட்டணம் | ................ | ........................... |
| D - உற்பத்தி மேற்பார்வையாளர்களுக்கான சம்பளங்கள் | ................ | ........................... |

[பக். 10 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


**48.** கம்பனியொன்று சரக்கிருப்பு வழங்கலை விலையிடுவதற்கு நிறையளித்த சராசரி முறையைப் பயன்படுத்துகிறது. 2016 மார்ச் மாதத்திற்கான சரக்கிருப்பின் உருப்படியொன்று தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

| திகதி | விபரம் | அளவு (அலகுகள்) | விலை (ரூ.) |
|---|---|---|---|
| 01.03.2016 | மீதி | 1 000 | 10 |
| 07.03.2016 | கொள்வனவுகள் | 2 000 | 15 |
| 14.03.2016 | கொள்வனவுகள் | 4 000 | 11 |
| 20.03.2016 | விற்பனைகள் | 4 000 | ? |

பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) 2016 மார்ச் மாதத்திற்கான விற்பனைக் கிரயம் ரூ. ................

(ஆ) 31.03.2016 இலுள்ளவாறான சரக்கிருப்பு ரூ. ....................

**49.** கம்பனியொன்று தனிப் பொருளொன்றை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. பின்வரும் விபரங்கள் 10 000 அலகுகள் உற்பத்தி மட்டத்துடன் தொடர்பானவையாகும்.

| | | |
|---|---|---|
| அலகொன்றிற்கான விற்பனை விலை | ரூ. | 90 |
| அலகொன்றுக்கான மாறும் கிரயம் | ரூ. | 60 |
| நிலையான கிரயம் | ரூ. | 180 000 |

சந்தை நிலைமைகளின் மாற்றங்கள் காரணமாக அலகொன்றுக்கான விற்பனை விலையும் மாறும் கிரயமும் ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில் முறையே 30% இனாலும் 20% இனாலும் அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

| நிலைமை | சமப்பாட்டுப் புள்ளி (அலகுகள்) | பாதுகாப்பு எல்லை (அலகுகள்) |
|---|---|---|
| (அ) சந்தை நிலைமைகள் மாற்றமடைவதற்கு முன்பு | ............................ | ............................ |
| (ஆ) சந்தை நிலைமைகள் மாற்றமடைந்த பின்பு | ............................ | ............................ |

**50.** கம்பனியொன்று இயந்திரமொன்றை ரூ. 2 400 000 இற்குக் கொள்வனவு செய்ய எண்ணியுள்ளது. இதன் பயன்தரு ஆயுட்காலம், எஞ்சிய பெறுமதி என்பன முறையே 5 வருடங்கள், ரூ. 600 000 ஆகும். நேர்கோட்டு முறையானது பெறுமானத்தேய்விடப் பயன்படுத்துகிறது. இவ் இயந்திரத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் ரூ. 600 000 தேறிய காசுப் பாய்ச்சலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) திரும்பப் பெறும் காலம் (வருடங்களில்) ....................

(ஆ) கணக்கீட்டுத் திரும்பல் வீதம் - சராசரி முதலீட்டு அடிப்படையில் (%) ..........................

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

 www.agaram.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**
* **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஆறு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்குமான விடையும் **புதியதொரு தாளில்** ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
* உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

1. எழுதுபொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வரையறுத்த சுமதி பொதுக் கம்பனியின் 2016.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது. இது பெறுமதி சேர் வரி (VAT) பதிவினைக் கொண்டுள்ள கம்பனியாகும்.

| விபரம் | வரவு (ரூ. '000) | செலவு (ரூ. '000) |
|---|---|---|
| சம்பளங்கள் | 1 000 | |
| வாடகை | 540 | |
| மின்சாரம் | 120 | |
| தொலைபேசி | 75 | |
| கொள்வனவுகள் | 6 000 | |
| VAT கொடுப்பனவுகள் | 600 | |
| 01.04.2015 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 10 000 | |
| 01.04.2015 இல் உள்ளவாறான சரக்கிருப்பு | 1 200 | |
| வியாபார வருமதிகள் | 7 000 | |
| வங்கியிலுள்ள காசு | 730 | |
| நடைமுறை ஆண்டிற்காக செலுத்தப்பட்ட வருமான வரி | 535 | |
| விற்பனைகள் | | 12 000 |
| VAT சேகரிப்புகள் | | 1 320 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | 4 000 |
| 01.04.2015 இல் உள்ளவாறான நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 2 327 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் - அலுவலக உபகரணங்கள் | | 600 |
| குத்தகை கடன்கொடுத்தோர் | | 2 353 |
| பொது ஒதுக்கம் | | 1 200 |
| 01.04.2015 இல் திரண்ட பெறுமானத்தேய்வு - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | | 4 000 |
| | **27 800** | **27 800** |

**மேலதிக தகவல்கள்:**

31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) வியாபார முகவருக்கு விற்பனையில் 2% செலுத்தப்பட்ட தரகு சம்பளங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ii) 2016 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூ. 15 000 இன்னும் செலுத்தப்படவில்லை.

(iii) 2016 மார்ச் மாதத்திற்கான தொலைபேசிக் கட்டணம் ரூ. 18 000 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் மார்ச் மாதத்திற்கான கட்டணம் ரூ. 8 000 ஆகும்.

(iv) கம்பனி சரக்கிருப்பை உருப்படி அடிப்படையில் பெறுமதியிடுகிறது. 31.03.2016 இல் சரக்கிருப்பானது மூன்று வகையான எழுதுகருவி உருப்படிகளைக் கொண்டுள்ளது. இத்தினத்தில் அவற்றின் கிரயம் மற்றும் தேறிய தேறத்தக்க பெறுமதி (தே.தே.பெ) ஆகியன பின்வருமாறு இருந்தது.

| வகை | கிரயம் (ரூ.'000) | தே.தே.பெ. (ரூ.'000) |
|---|---|---|
| A | 520 | 600 |
| B | 300 | 250 |
| C | 280 | 300 |

(v) 31.03.2016 இல் ரூ. 750 000 மீதியைக் கொண்ட கடன்பட்டோர் ஒருவர் 30.04.2016 இல் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். கம்பனியின் இயக்குனர்கள் 15.05.2016 இல் நிதிக் கூற்றுகளிற்கு அதிகாரம் அளித்துள்ளனர்.

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

 www.agaram.lk

(vi) 01.04.2015 இலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களினதும் அவற்றின் திரண்ட பெறுமானத்தேய்வுகளினதும் உள்ளடக்கம் பின்வருமாறு இருந்தது.

| விபரம் | கிரயம்/பெறுமதி (ரூ.'000) | திரண்ட பெறுமானதேய்வு (ரூ.'000) | கொண்டுசெல் தொகை (ரூ.'000) |
|---|---|---|---|
| கிரயத்தில் மோட்டார் வாகனங்கள் (குத்தகை அடிப்படையில்) | 6 000 | 2 400 | 3 600 |
| நியாயப் பெறுமதியில் அலுவலக உபகரணங்கள் | 2 500 | 1 000 | 1 500 |
| கிரயத்தில் தளபாடமும் பொருத்துகளும் | 1 500 | 600 | 900 |
| **மொத்தம்** | **10 000** | **4 000** | **6 000** |

எல்லாச் சொத்துகளும் (குத்தகை சொத்துகள் உட்பட) 01.04.2013 இல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இத்தினத்தில் இச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

(vii) 01.04.2015 இல் தளபாடமும் பொருத்துகளுக்கு எஞ்சியுள்ள பயன்தரு ஆயுட்காலம் 6 வருடங்கள் என மீளமைக்கப்பட்டுள்ளது. மேலும் 31.03.2016 இல் அலுவலக உபகரணங்கள் ரூ. 1 800 000 சந்தைப் பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

(viii) மோட்டார் வாகனங்கள் பொருட்களை விநியோகம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதுடன் அவற்றின் குத்தகைக் காலம் 5 வருடங்களாகும். வருடாந்த குத்தகைக் கட்டணம் ரூ. 1 583 000 ஆகும். நடைமுறையாண்டுக்கான குத்தகைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இவை முழுமையாக குத்தகை கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வேறு எதுவித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை. குத்தகை வட்டி பின்வருமாறு:

| வருடம் | வட்டி (ரூ.'000) |
|---|---|
| 2013/14 | 600 |
| 2014/15 | 502 |
| 2015/16 | 394 |
| 2016/17 | 275 |
| 2017/18 | 144 |

(ix) 31.03.2016 இல் கம்பனியானது பொது ஒதுக்கங்களை மூலதனமாக்குவதன் மூலம் தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு 40 000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூ. 20 வீதம் வழங்கியது. எனினும் இது தொடர்பான எதுவித பதிவும் செய்யப்படவில்லை.

(x) நடைமுறை ஆண்டிற்கான வருமான வரி ரூ. 500 000 என மதிப்பீடு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:**

LKAS 1 (நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பித்தல்) இன்படி வரையறுத்த சுமதி பொதுக் கம்பனியின் பிரசுரிப்பதற்குத் தேவையான பின்வரும் நிதிக் கூற்றுகள் (குறிப்புகள் உட்பட):

(1) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(2) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

(3) 31.03.2016 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று **(மொத்தம் 20 புள்ளிகள்)**

2. (அ) இலாப நட்டங்களை சமமாகப் பகிரும் ரங்கா, இரந்தி ஆகியோர் ஆலோசனைச் சேவை வழங்கும் நிறுவனமொன்றின் பங்காளராவர். 01.04.2015 இல் உதயன் என்பவர் பங்காளராகச் சேர்க்கப்பட்டுள்ளார். திருத்தியமைக்கப்பட்ட பங்குடைமை ஒப்பந்தம் பின்வருமாறு இருந்தது.

- இலாப நட்டங்கள் ரங்கா, இரந்தி, உதயன் ஆகியோர்களுக்கிடையில் முறையே 2:2:1 என்ற விகிதத்தில் பகிரப்படல்
- பங்குடைமை புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கு பேணப்படுவதில்லை. நன்மதிப்பு தொடர்பான எல்லாச் சீராக்கங்களும் பங்காளர் மூலதனக் கணக்குகள் ஊடாகப் பதிவுசெய்தல்
- பங்காளர்கள் தங்களின் வருட முடிவிலுள்ள மூலதன மீதிகளுக்கு வருடாந்தம் 10% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்
- இரந்தி, உதயன் ஒவ்வொருவரும் மாதாந்தம் ரூ. 40 000 சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவர்கள்
- பங்காளர்களால் பங்குடைமைக்கு வழங்கப்படும் கடன்களுக்கு வருடாந்தம் 8% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்

31.03.2016 இலுள்ளவாறான பங்குடைமையின் பரீட்சை மீதி பின்வருமாறு இருந்தது.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| ஆலோசனை வழங்கல் வருமானம் ........................................ | | 8 600 |
| ஆலோசனை வழங்கல் செலவுகள் ........................................ | 3 500 | |
| செயற்பாட்டுச் செலவுகள் ........................................ | 1 200 | |
| இரந்திக்குச் செலுத்திய சம்பளம் ........................................ | 480 | |
| 01.01.2016 இல் உதயனால் வழங்கப்பட்ட கடன் ........................ | | 2 000 |
| உதயனிற்கு செலுத்திய கடன் வட்டி ........................................ | 30 | |
| 31.03.2016 இலுள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல் தொகை ........................................ | 6 000 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு ............ | 1 800 | |
| ஏனைய வருமானம் ........................................ | | 100 |
| வங்கியிலுள்ள காசு ........................................ | 290 | |
| 01.04.2015 இலுள்ளவாறான மூலதனக் கணக்குகள்: - ரங்கா ............ | | 1 000 |
| - இரந்தி .......... | | 1 000 |
| 01.04.2015 இலுள்ளவாறான நடைமுறைக் கணக்குகள்: - ரங்கா ........ | | 200 |
| - இரந்தி........ | | 100 |
| உதயனால் கொண்டுவரப்பட்ட காசு ........................................ | | 300 |
| | **13 300** | **13 300** |

[ பக். 3 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

**மேலதிக தகவல்கள்:**

(i) உதயன் பின்வருவனவற்றை மூலதனமாக கொண்டு வந்தார்:

| | ரூ.'000 |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 700 |
| காசு | 300 |

எனினும் உதயனால் கொண்டுவரப்பட்ட காசு மாத்திரமே கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டுள்ளது.

(ii) உதயனைச் சேர்க்கும்போது பங்குடைமையின் நன்மதிப்பு ரூ. 1 800 000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% கிரயத்தில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

(iv) 01.01.2016 இல் பங்குடைமையானது வாடிக்கையாளர் ஒருவருக்கு ஆலோசனைச் சேவைகளை மாதாந்தம் ரூ. 100 000 கட்டணத்தில் வழங்குவதற்கான உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளது. இத்தினத்தில் இவ்வாடிக்கையாளர் ரூ. 500 000 ஐ செலுத்தினார். இத்தொகை ஆலோசனை வழங்கல் வருமானமாக பதியப்பட்டுள்ளது.

(v) 31.03.2016 இல் பங்குடைமையின் வங்கிக் கணக்கு மீதியானது அத்தினத்திலுள்ள வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வருவன தெரியவந்தன.

- வங்கியில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ஆலோசனை வழங்கல் வருமானம் ரூ. 300 000 ஆனது கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை.
- ரங்காவின் மனைவியிடமிருந்து ஆலோசனை வழங்கல் சேவைக்காகப் பெறப்பட்ட ரூ. 50 000 காசோலையொன்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்டபோதும் அது இன்னும் வசூல் செய்யப்படவில்லை. அது ஏனைய வருமானம் எனப் பதியப்பட்டுள்ளது.
- வெளிவாரி ஆலோசனை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 250 000 காசோலைகள் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.
- நிலையான கட்டளையின்படி பங்குடைமையின் வங்கிக் கணக்கிலிருந்து செலுத்திய இரந்தியின் வீட்டுக்கடனுக்கான தவணைக் கட்டணம் ரூ. 50 000 ஆனது கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2016 இலுள்ளவாறான சீராக்கிய காசு மீதி மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(2) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடைமையின் (பகிர்வுகள் உட்பட) வருமானக் கூற்று

(3) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்குகள்

**(10 புள்ளிகள்)**

(ஆ) பாதணிகளை உற்பத்திசெய்யும் டெல்வின் கம்பனியானது இரண்டு உற்பத்திப் பகுதிகளையும் பராமரிப்புச் செயற்பாடுகளிற்காக சேவைப் பகுதி ஒன்றையும் கொண்டுள்ளது. 5 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் அடுத்த வருடத்திற்கான பாதிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விபரம் | மொத்தம் | உற்பத்திப் பகுதி - A | உற்பத்திப் பகுதி - B | பராமரித்தல் பகுதி |
|---|---|---|---|---|
| நேரில் கூலிகள் (ரூ.) | 75 000 | 46 000 | 13 000 | 16 000 |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு (ரூ.) | 30 000 | 20 000 | 10 000 | – |
| வாடகை (ரூ.) | 90 000 | ? | ? | ? |
| பாதுகாப்புக் கட்டணங்கள் (ரூ.) | 45 000 | ? | ? | ? |
| மின்சாரம் (ரூ.) | 80 000 | ? | ? | ? |
| இயந்திர மணித்தியாலங்கள் | 15 000 | 10 000 | 5 000 | – |
| ஊழிய மணித்தியாலங்கள் | 14 000 | 2 000 | 12 000 | – |
| தளப்பரப்பு (சதுர மீற்றர்) | 9 000 | 3 800 | 3 600 | 1 600 |
| பாதுகாப்பு ஊழியர் எண்ணிக்கை | 15 | 7 | 7 | 1 |
| கிலோவாற் மணித்தியாலங்கள் | 1 600 | 1 000 | 500 | 100 |

**மேலதிக தகவல்கள்:**

(i) பராமரிப்புப் பகுதியின் மொத்த மேந்தலைக் கிரயமானது உற்பத்திப் பகுதி - **A,** உற்பத்திப் பகுதி - **B** ஆகியவற்றுக்கிடையில் முறையே 5:3 என்ற விகிதத்தில் மீள் பகிர்வுச் செய்யப்படல் வேண்டும்.

(ii) மேந்தலைகளை உறிஞ்சுவதற்கு உற்பத்திப் பகுதி - **A** ஆனது இயந்திர மணித்தியாலங்களையும் உற்பத்திப் பகுதி - **B** ஆனது ஊழிய மணித்தியாலங்களையும் பயன்படுத்துகிறது.

(iii) பாதணிச் சோடி ஒன்றை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திப் பகுதி - **A,** உற்பத்திப் பகுதி - **B** ஆகியவற்றில் முறையே 5 மணித்தியாலங்களும் 3 மணித்தியாலங்களும் செலவழிக்கப்படுகிறது.

(iv) பாதணிச் சோடியொன்றை உற்பத்தி செய்வதற்கான நேர்க் கிரயங்கள் :

| | | |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | சோடியொன்றுக்கு | ரூ. 30 |
| ஊழியம் | சோடியொன்றுக்கு | ரூ. 20 |

(v) உற்பத்தியல்லா மேந்தலைகள்:

| | | |
|---|---|---|
| மாறும் மேந்தலைகள் | சோடியொன்றுக்கு | ரூ. 25 |
| நிலையான மேந்தலைகள் | | ரூ. 105 000 |

[ பக். 4 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வு அடிப்படைகளின் பெயர்களை உள்ளடக்கிய மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை
(2) ஒவ்வோர் உற்பத்திப் பகுதிக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்
(3) பாதணிச் சோடியொன்றுக்கான உற்பத்திக் கிரயம்
(4) 5 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் மொத்தக் கிரயம் **(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**3.** சதீஸ் சில்லறை வியாபாரமொன்றை நடாத்தி வருகிறார். 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு செய்யப்பட்ட வருமானக் கூற்று ரூ. 600 000 இலாபமாகக் காட்டியது. 31.03.2016 இலுள்ளவாறான வரைபு செய்யப்பட்ட நிதிநிலைமைக் கூற்று ரூ. 50 000 காசு மீதியைக் காட்டியது. எனினும் இவர் கணக்குப் புத்தகங்களை சரியான முறையில் பேணிவருவதில்லை. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை எனப் பின்னர் தெரியவந்தது.

| **இல.** | **கொடுக்கல்வாங்கல்** |
|---|---|
| 1 | கடனுக்கு விற்பனை செய்த பொருட்கள் ரூ. 80 000 ஆகும். இப்பொருட்களின் கிரயம் ரூ. 60 000 ஆக இருந்தது. |
| 2 | கடனுக்கு விற்பனை செய்த ரூ. 36 000 இற்கான பொருட்கள் உட்திரும்பின. இப்பொருட்களின் கிரயம் ரூ. 30 000 ஆகும். |
| 3 | நன்கொடை செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் ரூ. 10 000. |
| 4 | வியாபாரத்தின் பராமரிப்புச் செலவுகள் ரூ. 10 000 ஆக இருந்தது. இதில் ரூ. 6 000 ஆனது தனிப்பட்ட முறையில் சதீஸினால் செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணம் வியாபாரத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. |
| 5 | 01.07.2015 இல் வருடாந்தம் 12% வட்டிக்கு ரூ. 300 000 வங்கிக் கடன் பெறப்பட்டது. வட்டி இன்னும் செலுத்தப்படவில்லை. |
| 6 | 31.03.2016 இல் முச்சக்கர வண்டியொன்று ரூ. 280 000 காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 7 | கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டிய ரூ. 30 000 ஆனது அதே நபருக்குக் கடன்கொடுத்தோர் என்ற வகையில் செலுத்த வேண்டிய ரூ. 50 000 இற்கு எதிராக தீர்க்கப்பட்டுள்ளது. மிகுதி காசாகச் செலுத்தப்பட்டது. |
| 8 | சதீஸின் ஆயுட்கால காப்புறுதிக் கட்டணக் கொடுப்பனவு ரூ. 12 000. |
| 9 | கொடுக்கல்வாங்கல் இல. 1 இல் வரவேண்டிய தொகை 5% கழிவை கழித்து பெறப்பட்டது. |
| 10 | கடந்த வருடத்தில் அறவிடமுடியாக்கடனாகப் பதிவழித்த ரூ. 15 000 ஆனது பெறப்பட்டது. |

**வேண்டப்படுவது:**

(1) கீழே தரப்பட்டுள்ள மாதிரியை ஒத்த மாதிரியைப் பயன்படுத்தி மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களை அவற்றின் பெறுமதியில் குறிப்பிட்டு, இவ் ஒவ்வொரு பெறுமதியினதும் முன்பாக அதிகரிப்பு எனின் (+) எனவும், குறைவு எனின் (–) எனவும் குறித்துக் காட்டுக.

**ரூ.'000**

| **கொடுக்கல் வாங்கல் இல.** | **சொத்துக்கள்** | | | | **பொறுப்புக்கள்** | | | **உரிமையாண்மை** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்** | **சரக்கிருப்பு** | **வியாபார வருமதிகள்** | **காசு** | **நீண்ட காலக் கடன்** | **வியாபார கொடுக்குமதிகள்** | **ஏனைய கொடுக்குமதிகள்** | |
| | | | | | | | | |

(2) 31.03.2016 இலுள்ளவாறான திருத்திய காசு மீதி
(3) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான திருத்திய இலாபம் (உரிமையாண்மையில் மேற்படி கொடுக்கல்வாங்கல்களின் தேறிய தாக்கத்தின் அடிப்படையில்) **(மொத்தம் 15 புள்ளிகள்)**

**4.** 01.04.2016 இல் ஆர்வின் என்பவர் தனது சொந்த சேமிப்பிலிருந்து ரூ. 900 000 முதலீடு செய்து உற்பத்தி வியாபாரமொன்றை ஆரம்பித்தார். 2016 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

(i) காசுப் பெறுவனவு மற்றும் காசுக் கொடுப்பனவு நாளேடுகளில் பதியப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்:

| **பெறுவனவுகள்:** | **ரூ.'000** |
|---|---|
| விற்பனைகள் | 6 000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவுகள் | 2 000 |
| **கொடுப்பனவுகள்:** | |
| மூலப்பொருட்கள் கொள்வனவுகள் | 1 200 |
| கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 800 |
| மூலப்பொருட்கள் கொள்வனவுக்கான முற்பணக் கொடுப்பனவு | 300 |
| இயந்திர இயக்குவிப்போருக்கான கூலிகள் | 400 |
| உற்பத்தி மேற்பார்வையாளர்களின் சம்பளங்கள் | 700 |
| தொழிற்சாலை மின்சாரம் | 60 |
| தொழிற்சாலை வாடகை | 600 |
| நிர்வாகச் செலவுகள் | 200 |
| இயந்திரக் கொள்வனவு (01.04.2016 இல்) | 4 000 |

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(ii) ஏனைய ஆரம்பப் பதிவேடுகளின் மொத்தங்கள்:

| | ரூ.'000 |
|---|---|
| விற்பனை நாளேடு | 12 000 |
| கொள்வனவு நாளேடு | 8 000 |
| விற்பனைத் திரும்பல் நாளேடு | 500 |

(iii) மூலப்பொருள் கொள்வனவுகளுக்கான முற்பண கொடுப்பனவுகளில் ரூ. 100 000 பெறுமதியான மூலப்பொருட்கள் மாத்திரமே 27.04.2016 இல் பெறப்பட்டுள்ளன. இது கணக்குப் புத்தகங்களில் இன்னும் பதியப்படவில்லை.

(iv) கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய ரூ. 300 000 ஆனது திரும்பப் பெற முடியாதுள்ளது. இத்தொகை அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும்.

(v) மாதமொன்றுக்கான தொழிற்சாலை வாடகை ரூ. 200 000 ஆகும். முதல் காலாண்டுக்கான வாடகை செலுத்தப்பட்டுள்ளது.

(vi) 2016 ஏப்ரல் மாதத்திற்கான மின்சாரப் பட்டியல் ரூ. 50 000 ஆனது 10.05.2016 இல் பெறப்பட்டுள்ளது.

(vii) இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்களாகும். இதன் எஞ்சிய பெறுமதி ரூ. 400 000 ஆகும். இயந்திரமானது நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

(viii) மாத முடிவில், சரக்கிருப்பு மீதிகள் பின்வருமாறு இருந்தன.

| | ரூ. '000 |
|---|---|
| மூலப்பொருட்கள் | 300 |
| நடைமுறை வேலை (உற்பத்திக் கிரயத்தில் பெறுமதியிடப்பட்டது) | 80 |
| முடிவடைந்த பொருட்கள் | 100 |

**வேண்டப்படுவது:**

(1) 2016 ஏப்ரல் மாதத்திற்கான பொதுப் பேரேட்டிலுள்ள பின்வரும் கணக்குகள் (T மாதிரியை பயன்படுத்துக):

(i) விற்பனைகள்
(ii) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(iii) மூலப்பொருள் கொள்வனவுகள்
(iv) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(v) முற்பணக் கொடுப்பனவுகள்

(2) 2016 ஏப்ரல் மாதத்திற்கான உற்பத்திக் கணக்கு

(3) 2016 ஏப்ரல் மாதத்திற்கான வருமானக் கூற்று

(4) 30.04.2016 இலுள்ளவாறான பின்வரும் உருப்படிகளுக்கான பெறுமதிகள்:

(i) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
(ii) முற்செலுத்திய செலவுகள்
(iii) உரிமையாண்மை

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

5. (அ) உற்பத்திக் கம்பனியொன்று தனது செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள இயந்திரத்திற்குப் பதிலாக புதிய இயந்திரமொன்றை பதீலீடு செய்ய எண்ணியுள்ளது. புதிய இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் இந்த இரண்டு இயந்திரங்களுடனும் தொடர்பானவை.

| விபரம் | புதிய இயந்திரம் (ரூ.'000) | தற்போதைய இயந்திரம் (ரூ.'000) |
|---|---|---|
| கிரயம் | 1 000 | – |
| தற்போதைய சந்தைப் பெறுமதி | – | 300 |
| எஞ்சிய பெறுமதி | 200 | – |
| வருடாந்த செயற்பாட்டுக் கிரயம்: | | |
| வருடம் 1 | 100 | 300 |
| வருடம் 2 | 100 | 300 |
| வருடம் 3 | 120 | 320 |
| வருடம் 4 | 120 | 320 |
| வருடம் 5 | 140 | 360 |

புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்படுமாயின் மேலதிக தொழிற்படு மூலதனமாக ரூ. 280 000 ஆனது இச் செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் தேவைப்படும். இத் தொகையானது செயற்றிட்ட முடிவில் மீளப் பெற்றுக்கொள்ளப்படும். செயற்றிட்டத்தின் தேவைப்படும் திரும்பல் வீதம் 10% ஆகும்.

10% இல் கழிவீட்டுக் காரணி (முதல் இரண்டு தசம தானத்தில்) பின்வருமாறு:

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக் காரணி | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் காசு வெளிப்பாய்ச்சல்களையும் உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கிய அட்டவணையொன்று

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதி அடிப்படையில் செயற்றிட்டத்தைத் தெரிவுசெய்வதற்கான சிபார்சு **(05 புள்ளிகள்)**

[ பக். 6 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(ஆ) பாடசாலையொன்றின் ஆசிரியர் நலன்புரிச் சங்கமானது தமது அங்கத்தவர்களுக்காக ஒன்றுகூடல் ஒன்றை ஒழுங்குசெய்கிறது. இச்சங்கம் தற்போது சேவையிலுள்ள 120 ஆசிரியர்களையும் 30 இளைப்பாறிய ஆசிரியர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. இந் நிகழ்வுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் பின்வருமாறு:

| | | ரூ. |
|---|---|---|
| சிற்றுண்டி உணவுகள் | அங்கத்தவர் ஒருவருக்கு | 1 100 |
| நினைவுப்பொருள் | அங்கத்தவர் ஒருவருக்கு | 225 |
| அன்பளிப்புப் பொதி | அங்கத்தவர் ஒருவருக்கு | 775 |
| விடுதிக் கட்டணங்கள் | | 35 000 |
| மண்டப அலங்காரம் | | 5 000 |
| ஒலிபெருக்கி வாடகைக் கட்டணம் | | 2 000 |
| நிகழ்வு ஒழுங்கமைப்புச் செலவுகள் | | 3 000 |

இச்சங்கமானது இளைப்பாறிய ஆசிரியர்கள் உட்பட இந்நிகழ்வில் பங்குகொள்ளும் எல்லா ஆசிரியர்களுக்கும் நுழைவுச்சீட்டை விற்பனை செய்ய எண்ணியுள்ளது. நுழைவுச்சீட்டு ஒன்றின் விலை ரூ. 3 000 ஆகும். மேலதிகமாகப் பெறப்படும் பணம் சமூக நலத் தேவைக்காகப் பயன்படுத்தப்படும்.

**வேண்டப்படுவது:**

ஒன்றுகூடல் தொடர்பில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

(1) ஆசிரியர் ஒருவருக்கான பங்களிப்பு

(2) மொத்தச் செலவை ஈடுசெய்வதற்காக பங்குபற்ற வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை

(3) எல்லா ஆசிரியர்களும் பங்குபற்றுவார்களாயின் சமூக நலத் தேவைக்காக அன்பளிப்பு செய்யக்கூடிய பணத்தொகை

(4) ரூ. 27 000 ஐ சமூக நலத் தேவைக்காக அன்பளிப்பு செய்ய வேண்டுமாயின் பங்குபற்ற வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை

(5) எல்லா ஆசிரியர்களும் பங்குபற்றுவார்களாயின் நுழைவுச்சீட்டை விற்கக்கூடிய ஆகக் குறைந்த விலை

(6) இளைப்பாறிய ஆசிரியர்கள் நுழைவுச்சீட்டை வாங்கத் தேவையில்லையெனவும் இவர்களில் 24 பேர் இந்நிகழ்வில் பங்குபற்றுவர் எனவும் எதிர்பார்க்கப்படுமாயின், மொத்தச் செலவை ஈடுசெய்வதற்காக விற்க வேண்டிய நுழைவுச்சீட்டுகளின் எண்ணிக்கை

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

6. (அ) 01.03.2016 இல் ஸ்தாபிக்கப்பட்ட மயூரி கல்வி நிறுவனமானது பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை நடாத்துகிறது. இது இரண்டு நிரந்தர ஆசிரியர்களையும் தற்காலிக ஆசிரியர் ஒருவரையும் வேலைக்கு அமர்த்தியுள்ளது. ஒவ்வோர் ஆசிரியரும் மாதமொன்றுக்கு 120 மணித்தியாலங்கள் கற்பித்தல் வேண்டும்.

(i) ஆசிரியர்களின் மொத்தச் சம்பளமானது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ● கற்பித்தலுக்கான கொடுப்பனவு (120 மணித்தியாலங்களுக்கு): | | |
| நிரந்தர ஆசிரியர் | ஒருவருக்கு மாதமொன்றுக்கு | ரூ. 75 000 |
| தற்காலிக ஆசிரியர் | மணித்தியாலமொன்றுக்கு | ரூ. 500 |
| ● மேலதிக வகுப்புகளை நடாத்துவதற்கான கொடுப்பனவுகள் | மணித்தியாலமொன்றுக்கு | ரூ. 750 |
| ● விடைத்தாள்கள் திருத்துதல் | விடைத்தாள் ஒன்றுக்கு | ரூ. 100 |

(ii) 2016 மார்ச் மாதத்திற்கான கற்பித்தல் மணித்தியாலங்களினதும் திருத்தப்பட்ட விடைத்தாள்களினதும் எண்ணிக்கை பின்வருமாறு:

| விபரம் | நிரந்தரம்: | | தற்காலிகம்: |
|---|---|---|---|
| | நந்தினி | சுரேஷ் | மஞ்சுளா |
| இம்மாதத்தில் வேலை செய்த மணித்தியாலங்கள் | 140 | 160 | 180 |
| திருத்தப்பட்ட விடைத்தாள்களின் எண்ணிக்கை | 100 | 150 | 200 |

(iii) ஊழியர் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றுக்கான பங்களிப்பானது நிரந்தர, தற்காலிக ஆசிரியர்களினது மொத்தச் சம்பளத்தின் அடிப்படையிலானதாகும். ஊழியர் சேமலாப நிதிக்கான தொழில்தருனர், ஊழியர் பங்களிப்பு முறையே 15%, 10% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதிக்கான தொழில்தருனரின் பங்களிப்பு 3% ஆகும்.

**வேண்டப்படுவது:**

2016 மார்ச் மாதத்திற்கான:

(1) சம்பளப் பட்டியல்

(2) சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு **(05 புள்ளிகள்)**

[ பக். 7 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

**(ஆ)** பாடசாலையொன்றின் பழைய மாணவிகள் சங்கமொன்று 01.04.2013 இல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப அங்கத்தவர்கள் ரூ. 500 000 பங்களிப்புச் செய்து ஆயுட்கால அங்கத்தவர்களாக இணைந்துகொண்டனர். கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் இச்சங்கத்தின் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

| விபரம் | 31.03.2016 இலுள்ளபடி (ரூ.'000) | 31.03.2015 இலுள்ளபடி (ரூ.'000) |
|---|---|---|
| பெறவேண்டிய சந்தா | 20 | 15 |
| முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா | 30 | 25 |
| திரண்ட நிதி | ? | 200 |
| ஆயுட்கால அங்கத்துவ நிதி | ? | 400 |
| ரீ-சேட்டுகளின் இருப்பு கிரயத்தில் | 40 | - |
| முற்பண மண்டப பதிவுக் கட்டணம் | - | 25 |
| இசைக் கச்சேரியிலிருந்து பெற வேண்டியவை | ? | - |
| காசு | ? | 50 |

**மேலதிக தகவல்கள்:**

(i) நபரொருவருக்கான வருடாந்தச் சந்தா ரூ. 500 ஆகும். 31.03.2016 இல் 600 அங்கத்தவர்கள் (ஆயுட்கால அங்கத்தவர்கள் நீங்கலாக) காணப்பட்டனர்.

(ii) ஆயுட்கால அங்கத்துவக் கட்டணமானது 10 வருட காலத்திற்கு வருமானமாக இனங்காணப்படும்.

(iii) பின்வரும் தகவல்கள் இச்சங்கத்தின் நிதியை அதிகரிப்பதற்கு 01.10.2015 இல் நடாத்தப்பட்ட இசைக் கச்சேரியுடன் தொடர்பானவையாகும்:

| விபரம் | பெறப்பட்ட/செலுத்தப்பட்ட காசு (ரூ.'000) |
|---|---|
| நுழைவுச்சீட்டு விற்பனைகள்: | |
| நுழைவுச்சீட்டொன்று ரூ. 1 000 படி 100 நுழைவுச்சீட்டுகள் | 100 |
| நுழைவுச்சீட்டொன்று ரூ. 500 படி 400 நுழைவுச்சீட்டுகள் (80% மட்டுமே பெறப்பட்டுள்ளது) | 160 |
| கச்சேரிக்கான அனுசரணைத் தொகை (75% மாத்திரமே பெறப்பட்டுள்ளது) | 375 |
| இசைக் கலைஞர்களுக்கான கொடுப்பனவுகள்: | |
| 5 பாடகர்களுக்கு ஒருவருக்கு ரூ. 40 000 படி | 200 |
| இசைக்குழு | 80 |
| மண்டப வாடகைக் கட்டணம் | 50 |
| சிற்றுண்டி உணவு வகை | 30 |

(iv) சங்கமானது ஒவ்வொன்றும் ரூ. 200 படி 500 ரீ–சேர்ட்டுகளைக் காசுக்குக் கொள்வனவு செய்தது. இவற்றுள் 300 ரீ–சேர்ட்டுகள் அங்கத்தவர்களுக்கிடையில் ஒவ்வொன்றும் ரூ. 250 படி காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.

(v) நிர்வாக உதவியாளருக்கு மாதாந்தச் சம்பளமாக ரூ. 30 000 செலுத்தப்படுகிறது.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுக் கணக்கு

(2) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வருவன:
- (i) சந்தா வருமானம்
- (ii) இசைக் கச்சேரியின் மிகை/பற்றாக்குறை
- (iii) ரீ–சேர்ட் விற்பனை மீதான மிகை/பற்றாக்குறை

(3) 31.03.2016 இலுள்ளவாறான பின்வருவனவற்றின் மீதி:
- (i) திரண்ட நிதி
- (ii) ஆயுட்கால அங்கத்துவ நிதி
- (iii) இசைக் கச்சேரியிலிருந்து பெற வேண்டியவை

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

7. **(அ)** பின்வரும் தகவல்கள் வரையறுத்த உஷா பொதுக்கம்பனியின் 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவையாகும்.

| | |
|---|---|
| மொத்த இலாப வீதம் | 20% |
| சொத்துப் புரள்வு விகிதம் | 0.5 தடவைகள் |
| சரக்கிருப்புப் புரள்வு விகிதம் | 8 தடவைகள் |
| மொத்த இலாபம் | ரூ. 400 000 |
| மொத்தச் செலவுகள் | ரூ. 160 000 |
| 31.03.2016 இலுள்ளவாறான மொத்தப் பொறுப்புக்கள் | ரூ. 1 600 000 |

**வேண்டப்படுவன:**

(1) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனைகள்

(2) 2015/16 ஆம் வருடத்திற்கான சராசரிச் சரக்கிருப்பு

(3) 31.03.2016 இலுள்ளவாறான மொத்தச் சொத்துக்கள்

(4) உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம்

(5) உரிமையாண்மை விகிதம்

**(05 புள்ளிகள்)**

[பக். 8 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(ஆ) 31.03.2016 மற்றும் 31.03.2015 இலுள்ளவாறான வரையறுத்த அகிலன் பொதுக்கம்பனியின் சுருக்கிய நிதி நிலைமைக் கூற்றுகள் பின்வருமாறு.

| | 31.03.2016 இலுள்ளவாறு (ரூ.'000) | 31.03.2015 இலுள்ளவாறு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - மீள் மதிப்பீட்டுத் தொகையில் | 312 | 240 |
| திரண்ட பெறுமானத்தேய்வு - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | (72) | (40) |
| சரக்கிருப்புகள் | 184 | 104 |
| வியாபார வருமதிகள் | 80 | 120 |
| ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு | (32) | (16) |
| காசு | 192 | – |
| **மொத்தச் சொத்துக்கள்** | **664** | **408** |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 280 | 40 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 56 | 16 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 32 | 96 |
| நீண்டகாலக் கடன்கள் | 120 | – |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 136 | 144 |
| செலுத்த வேண்டிய சம்பளங்கள் | 40 | 32 |
| வங்கி மேலதிகப்பற்று | – | 80 |
| **மொத்தப் பொறுப்புக்களும் உரிமையாண்மையும்** | **664** | **408** |

**மேலதிக தகவல்கள்:**

(i) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் சுருக்கிய வருமானக் கூற்று பின்வருமாறு:

| **விபரம்** | **ரூ.'000** |
|---|---|
| விற்பனைகள் | 120 |
| விற்பனைக் கிரயம் | (80) |
| தரகு வருமானம் (வருட முடிவில் பெறவேண்டியவை எவையுமில்லை) | 8 |
| தளபாட விற்பனை மீதான ஆதாயம் (இதன் கொண்டுசெல் தொகை ரூ. 40 000) | 16 |
| ஐயக்கடன்கள் | (16) |
| பெறுமானத்தேய்வு | (40) |
| சம்பளங்கள் | (72) |
| வருடத்திற்கான நட்டம் | (64) |

(ii) இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன. இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.

(iii) இவ்வருடத்தில் பங்கு வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 31.03.2016 இல் 3 வருட கடனொன்று பெறப்பட்டது.

**வேண்டப்படுவது:**

LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுத்த அகிலன் பொதுக்கம்பனியின் காசுப் பாய்ச்சல் கூற்று

**(10 புள்ளிகள்)**
**(மொத்தம் 15 புள்ளிகள்)**

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk